செய்தி வெளியீட்டு எண்.985 நாள்: 18.12.2009

**<u>கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டையில் கழிவுநீர் இறைக்கும் நிலையத்தை துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.</u>**

கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டையில் 610 தொழிற்சாலைகளும் மற்றும் அருளாயம்மன் பேட்டை, ரெட்டித் தெரு, நாகி ரெட்டித் தோட்டம், லேபர் காலனி போன்ற குடியிருப்புப் பகுதிகளும் அமைந்துள்ளன. இத்தொழிற்பேட்டையின் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனத்திற்கு உத்தரவிட்டார். இதன் அடிப்படையில், இப்பணி சென்னை குடிநீர் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு, தொழிற்பேட்டையில் இரண்டு கழிவுநீர் இறைக்கும் நிலையங்கள், பிரதான கழிவுநீர் குழாய்கள் மற்றும் கழிவுநீர் விசைக்குழாய்கள் அமைக்க மொத்தம் 7.35 கோடி ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதில் 2 கோடியே 57 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கிண்டி தொழிற்பேட்டை தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பாகவும், 4 கோடியே 77 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பாகவும் செலவிடப்பட்டுள்ளது.

கழிவுநீர் இறைக்கும் நிலையத்தை திறந்து வைத்து, செய்தியாளர்களிடம் துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியதாவது:

இத்திட்டத்தின் காரணமாக தொழிற்பேட்டையின் கழிவுநீர் நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும். இதன் மூலம் கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள 610 தொழிற்சாலைகளும், தொழிற்பேட்டைக்கு அருகிலுள்ள குடியிருப்பு பகுதியில் வாழும் சுமார் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன் அடைவார்கள். இதுவரை கிண்டி தொழிற்பேட்டை கழிவுநீர் இறைக்கும் நிலையத்திலிருந்து அடையாறு ஆற்றில் கலந்து வந்த கழிவுநீர் முழுவதுமாக நிறுத்தப்படும். இதைப்போல், லேபர் காலனி, நாகி ரெட்டித் தோட்டம் போன்ற பகுதிகளிலிருந்து அடையாறு ஆற்றில் கலந்து வந்த கழிவுநீர் நிறுத்தப்படும். இத்திட்டத்தால் அடையாறு ஆற்றில் 7 வழித் தடங்கள் மூலம் கலந்து வந்த கழிவுநீர் தவிர்க்கப்பட்டுள்ளது.

என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் திரு. என்.எஸ். பழனியப்பன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறைச் செயலாளர் டாக்டர். நிரஞ்சன் மார்டி, சென்னை குடிநீர் வாரியத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சிவ்தாஸ் மீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9.